**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர், தேதி: 25-3-2019
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உலகவானிலையியல் தினம்

நமது அன்றாட வாழ்வில் எடுக்கப்படும் சில முடிவுகள் வானிலையைப் பொறுத்தே அமைகிறது. வேளாண்மையில் நல்ல மகசூல் கிடைப்பதற்கு பயிர் பருவத்தின் போது நிலவும் வானிலையே பெரும் பங்கு வகிக்கிறது. நாம் அன்றாடம் உட்கொள்ளும் உணவும், அதனை உற்பத்தி செய்யும் விவசாயிகளின் வாழ்வாதாரமும் வானிலையைப் பொறுத்தே அமைகிறது.

ஒவ்வொரு ஆண்டும், உலக வானிலையையியல் தினம் மார்ச் 23-ம் தேதி அன்று உலக உறுப்பினர்கள் அளவில் கொண்டாடப்படுகிறது. உலக வானிலையையியல் நிறுவனத்தின் சார்பில் 1950-ம் ஆண்டு நடைபெற்ற மாநாட்டில் மார்ச் 23-ம் தேதியை நினைவூட்டும் விதமாக, 1961-ம் ஆண்டுமுதல் உலக வானிலையையியல் தினம் கொண்டாடப்பட்டது. இதன் தொடர்ச்சியாக வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், பயிர் மேலாண்மை இயக்ககம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமானது சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை மாணவர்கள் மற்றும் விஞ்ஞானிகளிடையே உருவாக்க உலக வானிலையியல் தினத்தை நாடளாவிய காலகட்டமைப்பு மற்றும் பயிர் உருவாக்கப்படுதல் கட்டமைப்பு கருத்தரங்கோடு இன்று (25.03.2019) கொண்டாடப்பட்டது.

தொடக்கவிழாவில் முனைவர் பயிர்மேலாண்மை இயக்குநர், முனைவர் வெ. கீதாலட்சுமி அவர்கள் அனைவரையும் வரவேற்று, மாறும் காலநிலையில் வானிலையின் பங்கு பற்றியும், பயிர் உருவாக்குதல் கட்டமைப்பின் முக்கியத்துவத்தையும் விவரித்தார்.

பேராசிரியர் மற்றும் காலநிலை ஆராய்ச்சி மையத்தின் முன்னாள் துறைத்தலைவர் முனைவர் இரா. ஜெகநாதன், , சிறப்புரைவழங்கினார். இவர், கடந்தகால, நிகழ்கால மற்றும் எதிர்கால காலநிலை பற்றி கூறினார். மேலும், வளிமண்டலத்தில் கரியமிலவாயுவின் அளவு மற்றும் பயிர்களுக்கு அதனுடைய தாக்கம் பற்றி விவரித்தார்.

வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர், நீ. குமார், அவர்கள் வேளாண் வானிலையில் உள்ள ஆராய்ச்சிகள் பற்றி கூறினார். மேலும், வானிலைமுனைன்னறிவிப்பின் தர அளவை மேம்படுத்த அறிவுறுத்தினார். வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையத்தின் வளர்ச்சியுடன், மாணவர்களின் துரித செயல்பாடுகளையும் பாராட்டினார்.

வேளாண் காலநிலைஆராய்ச்சிமையத்தின் மாணவர்கள் சூரியன் - பூமி- வானிலை என்ற தலைப்பில் குறும்படம் ஒன்று திரையிட்டனர். வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம் காலநிலை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடத்திய ரங்கோலி, ஓவியம் மற்றும் வினாடிவினா போன்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழுடன் பரிசு வழங்கப்பட்டது.

நிறைவாக முனைவர். எஸ் பி. இராமநாதன், பேராசிரியர் மற்றும் தலைவர். வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம் அவர்கள் நன்றியுரைவழங்கினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்